தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 171 ★ 22.10.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:171 ★22.10.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai



திருவள்ளூர் மாவட்டம் இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம், எஸ்.வி.ஜி.புரம் ஊராட்சி பகுதியில் வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறையின் ''உங்களை தேடி உங்கள் ஊரில்'' திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் இருளர் குடியிருப்பு பகுதியில் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தில் (பிம்ஜென்மன்) ரூ.6.59 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 13 வீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா நேரில் ஆய்வு மேற்கொண்டு, சாலை, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பாக விபரங்களை கேட்டறிந்தார். தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) வெங்கடேசன், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் ராஜகோபால், உதவி இயக்குநர் (ஊராட்சிகள் (ம) தணிக்கை (மேற்கு)) எஸ்.ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) கஜலட்சுமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

2026-27 ஆம் ஆண்டிற்கு தேசிய கல்வி உதவித்தொகை பெற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

ஒன்றிய அரசால் இதர பிற்படுத்தப்பட்டோர் (OBC), பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் (EBC), சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு (DNT) கல்வி உதவித்தொகை வழங்கும் வகையில் பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகைத் L (PM YASASVI Top class education in schools for OBC, EBC & DNT Students) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, 2026–27– ஆம் ஆண்டிற்கு தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (National Scholarship Portal) அறிவிக்கப்பட்டுள்ள (Top Class School) சிறந்த செயல்பாடு கல்வி நிறுவனம் (100% தேர்ச்சி பெற்றுள்ள) பள்ளிகளில் நடப்பாண்டில் 9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் தமிழகத்தைச் சார்ந்த தகுதியான மாணவ/மாணவியர்கள் கல்வி உதவித்தொகை (புதுப்பித்தல்/புதியது) திட்டத்தில் தேசிய கல்வி உதவித்தொகை (https://scholarships.gov.in) இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

இத்திட்டத்தில் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணமாக ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக 9–10 ஆம் வகுப்பு பயில்பவருக்கு ரூ.75,000/– மற்றும் 11–12 ஆம் வகுப்பு பயில்பவருக்கு ரூ.1,25,000/– வரை உதவித்தொகையாக ஒன்றிய அரசால் வழங்கப்படும். இத்திட்டத்தில் மாணவியர்களுக்கு 30%ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

மாணவ/மாணவியர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC), பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் (EBC) அல்லது சீர்மரபினர் (DNT) பிரிவைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். 2025–26 ஆம் கல்வியாண்டில் 100% தேர்ச்சி பெற்று தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ள பள்ளிகளில் பயில்பவராக இருத்தல் வேண்டும்.

புதுப்பித்தல் (Renewal):

இத்திட்டத்தில் கடந்த நிதியாண்டில் (2025–26) கல்வி உதவித்தொகை பெற்று பயனடைந்த மாணவ/மாணவியர்கள் நடப்பாண்டில் (2026–27) 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு விண்ணப்பத்தினை தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் 2 (National Scholarship Portal – (https://scholarships.gov.in)) (Renewal) கல்வி உதவித்தொகை படிவத்தை இணைப்பில் பூர்த்தி செய்து 31102026–க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணையதளத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை தத்தம் பள்ளி தலைமை ஆசிரியர் விண்ணப்பங்கள் சரிபார்ப்பதற்கான (புதுப்பித்தல் – for Renewal) கடைசி நாள்.15.11.2026.

புதியது (Fresh):

2026–27 ஆம் ஆண்டிற்கு புதியதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் பயிலும் தகுதியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு விண்ணப்பிப்பதற்கான தேதி NSP இணையதளத்தில் அறிவிக்கப்படும்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கூடுதல் விபரங்கள் அறிந்திட National Scholarship Portal (https://scholarships.gov.in) மற்றும் அதிகாரமளித்தல் (https://Socialjustice.gov.in) மற்றும் மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையதளத்தினை அறிந்துக்கொள்ளலாம். தகுதியான மாணவ/மாணவியர்கள் இத்திட்டத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்ட விதி–2018க்கு ஏற்ப இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சங்கங்கள் மற்றும் மனுதாரர்களுடன் ''சிறப்பு குறைதீர்'' கூட்டம் நடத்தப்பட உள்ளது.தற்போது. இம்மாவட்ட எல்லைக்குட்பட்ட அனைத்து மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளி சங்க பிரதிநிதிகள் ஆகியோர் 30.10.2026 அன்று காலை 10.00 மணியளவில் இராணிப்பேட்டை மாவட்ட மக்கள் குறைதீர்வு கூட்ட அரங்கில் (GDP Hall) நடைபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான ''சிறப்பு குறைதீர்'' கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை கொடுத்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு குறித்த "துளி" இலச்சினையைத்திறந்து வைத்தார் முதல்வர் விஜய்

தமிழ்நாடு முதல்–அமைச்சர் ச. ஜோசப் விஜய் மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு குறித்த "துளி" இலச்சினையைத் திறந்து வைத்து, மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;–

தமிழ்நாடு முதல்–அமைச்சர் ச. ஜோசப் விஜய் இன்று (21.10.2026) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சென்னை, சேப்பாக்கம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு குறித்த "துளி" இலச்சினையைத் திறந்து வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு மாதிரி இல்லத்தைப் பார்வையிட்டார். பின்னர், மெரினா கடற்கரையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள பகுதிகளில் மழைநீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே ஏற்படுத்திடும் வகையில் மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, குறும்படத்தைப் பார்வையிட்டார்.

நீர் என்பது வீட்டு உபயோகம், விவசாயம், தொழில்துறை மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்கு இன்றியமையாத இயற்கை வளமாகும். அதிகரித்து வரும் நீர்த்தேவை, நகரமயமாக்கல், மாறிவரும் மழைப்பொழிவு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மழைநீரைச் சேகரித்து முறையாகப் பயன்படுத்துவதும், நிலத்தடி நீர்வளங்களைப் பாதுகாப்பதும் அவசியமாகிறது.

தமிழ்நாடு முழுவதும் மழைநீர் சேமிப்பை மக்கள் இயக்கமாகச் செயல்படுத்தும் நோக்கில், ஏற்கெனவே உள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைப் புதுப்பித்தல், புதிய கட்டமைப்புகளை உருவாக்குதல், நிலத்தடி நீர்வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு சிறப்பு இயக்கத்தை முன்னெடுக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, அரசு அலுவலகங்கள், குடியிருப்புகள் மற்றும் பிற கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ஆய்வு

அதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமை ப்புகளை ஆய்வுசெய்து சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், தங்களது கட்டுப்பா ட்டிலுள்ள மழைநீர்க் கட்டமை ப்புகள் முழுமையாகச் செயல்படும் நிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். பொதுக் கட்டடங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் வணிகக் கட்டடங்களின் மேற்கூரைகள், நீர்வழிப் பாதைகள், வடிகட்டும் அறைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் குழிகள் மற்றும் கிணறுகள் உள்ளிட்ட மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் சம்பந்த ப்பட்ட அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.

நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கட்ட அனுமதிவிதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மழைநீர் சேமிப்பு தொடர்பான விதிகள் திறம்படச் செயல்படுத்தப்படும். புதிய கட்டடங்கள் மட்டுமின்றி, ஏற்கெனவே உள்ள வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், நிறுவனங்கள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்த ஊக்குவிக்கப்படும். மேலும், நிலத்தின் தன்மை, நிலத்தடி அமைப்பு மற்றும் நீரியல் சூழலுக்கு ஏற்றவாறு மழைநீர் செறிவூட்டும் அகழிகள், நீர் ஊடுருவும் குழிகள், செறிவூட்டும் கிணறுகள், வண்டல் தடுப்புகள் மற்றும் வடிகட்டும் அமைப்புகள் போன்ற கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.

அரசுத் துறைகளும், உள்ளாட்சி அமைப்புகளும் தங்களது வளாகங்களில் மழைநீரைச் சேகரித்து, மீண்டும் பயன்படுத்து





வதற்கும், நிலத்தடி நீரைச் செறிவூட்டுவதற்கும் தேவையான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும். தொழில்நுட்பரீதியாகச் சாத்தியமுள்ள இடங்களில் புதிய நகர்ப்புற மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களிலும் மழைநீர் சேமிப்பு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படும். மழைநீர் சேமிப்பை மக்கள் இயக்கமாக மாற்றும் வகையில், அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள், சுயஉதவிக் குழுக்கள், தன்னார்வ அமைப்புகள், தொழிற்சாலைகள் மற்றும் சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்து மாநில அளவில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திட்டங்களுடன் இயக்கங்கள் ஒருங்கிணைப்பு

மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு தொடர்பாக, உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சுயஉதவிக் குழுக்கள், குடியிருப்போர் நலச் சங்கத்தினர் மற்றும் சமூகத் தன்னார்வலர்களுக்குப் பயிற்சி மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சிகள் நடத்தப்படும். ஒவ்வொரு வீட்டிலும், நிறுவனத்திலும் மழைநீரை அந்தந்த இடத்திலேயே சேகரித்து முறையாகப் பயன்படுத்துவதற்கும், கட்டமைப்புகளைத் தொடர்ந்து பராமரி ப்பதற்கும் பொதுமக்கள் மற்றும் நிறுவனத்தினர் ஊக்குவிக்கப்படுவர். நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், ஏற்கெனவே உள்ள மழைநீர்க் கட்டமைப்புகள், புதுப்பிக்கப்பட்ட மற்றும் பழுதுபார்க்கப்பட்ட கட்டமைப்புகள், புதிதாக உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கை கள் குறித்த பதிவுகளைப் பராமரிக்க வேண்டும். சாத்தியமான இடங்களில், பணிகளின் முன்னேற்றம் குறித்த புகைப்படங்கள், புவியிடக் குறியீடுகள் மற்றும் இணையவழி அறிக்கை முறைகள் மூலம் ஆவணப்படுத்தப்படும்.

மழைநீர் சேமிப்புப் பணிகளில் சிறப்பாகச் செயல்படும் மாவட்டங்கள், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிகள், கல்லூரிகள், அரசு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் மற்றும் சமூக அமைப்புகளுக்கு உரிய அங்கீகாரங்கள் மற்றும் விருதுகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொ ள்ளப்படும். மழைநீர் சேமிப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல், நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மேம்பாடு, நகர்ப்புற நீர் மேலாண்மை, ஊரக மேம்பாடு மற்றும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துதல் தொடர்பாக, நடைமுறை யில் உள்ள திட்டங்களுடன் இவ்வியக்கம் ஒருங்கிணை க்கப்படும். இதன்மூலம் கிடைக்க க்கூடிய வளங்களைத் திறம்படப் பயன்படுத்துவ துடன், ஒரே பணியை மீண்டும் மீண்டும் மேற்கொள்வதும் தவிர்க்கப்படும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, இவ்வியக்கத்திற்கான முதன்மைத் துறையாகச் செயல்பட்டு, தொடர்புடைய அனைத்துத் துறைகள், மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு களுடன் இணைந்து செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும்.

பொதுமக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்

பொதுமக்கள் தங்களது வீடுகளிலும், நிறுவன த்தினர் தங்களது நிறுவனங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமை ப்புகளைச் சீரமைத்து, முறையாகப் பராமரித்து, மழைநீரைச் சேகரித்துப் பயன்படு த்துவதன் மூலம் நீர்வளப் பாதுகாப்பை உறுதிசெய்து, அரசின் மழைநீர் சேமிப்பு முன்னெடு ப்புகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ரா. குமார், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் நெ. மரிய வில்சன், தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், அரசுத் துறை செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவெக ஆட்சியில் இந்தியும், ஆங்கிலமும் என்ற இருமொழி கொள்கை வந்துவிட்டதா? திமுக காட்டம்

தமிழும் ஆங்கிலமும் தான் தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கை. தவெக ஆட்சியில் அது "இந்தியும் ஆங்கிலமும்" என்ற இருமொழிக் கொ ள்கையாக மாறிவி ட்டதா?காவல் துறை கொடி நாளில், இந்தியும் ஆங்கிலமும் மட்டும் இடம்பெ ற்றுள்ள badge–ஐ தமிழ்நாடு காவலர்கள் சீருடையில் அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுவது ஏன்?தமிழ்நாடு காவல்துறையில் தமிழுக்கே இடமில்லையா? காவல்துறை என்பது மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்ட துறை என்பதை, அந்தத் துறையைத் தனது நேரடிப் பொறுப்பில் வைத்திருக்கும் முதலமைச்சர் அறிவா ரா?அல்லது மாநிலத்தின் மொழி உரிமையோடு சேர்த்து, காவல்துறை மீதான தனது அரசியல் பொறுப்பையும் ஒன்றிய அரசிடம் ஒப்படைத்து சரணடைந்துவி ட்டாரா? தமிழ்நாட்டில் தமிழ் கேட்பது கூட இன்று ஒரு கேள்வியாக வேண்டிய நிலை வந்திருப்பதே வேதனை.குறிப்பு: பல ஆண்டுகளாக ஒன்றிய அரசு அழுத்தத்தை கொடுத்த நிலையில் திராவிட மாடல் அரசு ஒருபோதும் அதை ஏற்காமல் இருந்தது. இன்றைய அரசுக்கு முதுகெலும்பு ஏது !



காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு

இராணிப்பேட்டை ஆயுதப்படை தலைமையகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மலர் வளையம் வைத்து அஞ்சலி

காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு இராணிப்பேட்டை ஆயுதப்படை தலைமையகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் காவலர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 21ஆம் தேதி காவலர் வீரவணக்க நாள் அனுசரிக்கப்படுகிறது.

அதைத்தொடர்ந்து வளையம் வைத்து, அஞ்சலி செலுத்தி பின் 63 துப்பாக்கி குண்டுகள் முழங்க மரியாதை செலுத்தப்பட்டது.




அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 1959 ஆம் ஆண்டு அக்டோபர் 21–ம் தேதி லடாக் பகுதியில் 'ஹாட் ஸ்பிரிங்ஸ்' என்னுமிடத்தில் சீன ராணுவத்தினர் நடத்திய திடீர் தாக்குதலில் மத்திய பாதுகாப்பு படை காவலர்கள் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து நாடு முழுவதும் பல்வேறு சம்பவங்களில் பணியின் போது வீரமரணம் அடைந்த

அதன்படி இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் இன்று (21.10.2026) காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு காவல் துறையில் வீர மரணம் அடைந்த காவலர்களின் தியாகத்தை நினைவு கூறும் வகையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின், இ.கா.ப., அவர்கள் தலைமையில் காவலர் வீர வணக்க நாள் உறுதிமொழி ஏற்று மலர்

அனைவரும் 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.வீரவணக்கம் நாளை முன்னிட்டு போலீசார் கருப்பு பட்டை அணிந்து நிகழ்ச்சியில் பங்கேற்றனர். உடன் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் திரு. கனக ராஜ்(இ ராணிப்பேட்டை உட்கோட்டம்), திரு. வெங்கடகிருஷ்ணன் (IU–CAW) மற்றும் காவல் அதிகாரிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



பழனி அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் கம்பி வட ஊர்தி (ROPECOR) சேவை நேற்று 20.10.2026 காலை சுமார் 11.00 மணி அளவில் கியர் பாக்ஸ் சாட்டில் (gear Box shaft) ஏற்பட்ட பழுது காரணமாக ரோப் கார் இயக்கம் தடைபட்டுள்ளது கியர் பாக்ஸ் சாப்ட் (Gear box shaft) கோவையில் உள்ள நிறுவனத்திற்கு பழுதினை நிவர்த்தி செய்வதற்காக கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது பழுது நிவர்த்தி செய்யப்பட்ட உடன் மீண்டும் ரோப் கார் சேவை பக்தர்களின் பயன்பாட்டிற்கு வரும் என்று விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

–இப்படிக்கு திருக்கோவில் நிர்வாகம்

காவேரிப்பாக்கம் விவேகானந்தா வித்யாலயா பள்ளியில் விஜயதசமி மாணவர் சேர்க்கை விழா

ராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் பேரூராட்சி உப்புமேட்டு தெருவில் அமைந்துள்ளது விவேகானந்தா வித்யாலயா. இப்பள்ளியில் விஜயதசமி முன்னிட்டுமாணவர்சேர்க்கைவிழாகொண்டாடப்பட்டது.



இந்த விழாவிற்கு பள்ளி தாளாளர் மணிபாரதி பிச்சாண்டி தலைமை தாங்கி துவக்கி வைத்தார். இந்தவிழாவில் முதன்முதலில் முறைப்படி கல்வியைத் தொடங்கும் குழந்தைகளுக்கான வித்யாரம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து புதிய மாணவ, மாணவிகள் சேர்க்கை நடைபெற்றன. அப்போது புதியதாக பள்ளியில் சேரும் குழந்தைகள் ஆர்வமுடன் முதல் எழுத்தை எழுதி தங்களது கல்விப் பணத்தை தொடங்கினர். அப்போது பள்ளியின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் என திரளாகக் கலந்து கொண்டு குழந்தைகளை ஆசீர்வதித்தனர்.

பழனி அருகே 21 கிலோ கஞ்சா பறிமுதல்; 3 பேர் கைது

ஒடிசாவில் இருந்து ரயில் மூலம் கஞ்சா கடத்தி வந்ததாகக் கூறப்படும் சம்பவத்தில், 21 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்த போலீசார், 3 பேரைக் கைது செய்துள்ளனர். மேலும், தொடர்புடையதாகக் கூறப்படும் 3 பேரைத் தனிப்படை போலீசார் தேடி வருகின்றனர்.

சமூக வலைதளங்களில் அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் புகைப்படங்கள், வீடியோக்களைப் பதிவிட்டு பொதுமக்களை அச்சுறுத்துவோரையும் காவல்துறையினர் கண்காணித்து வருகின்றனர். இதற்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

போதைப்பொருள் கடத்தல், விற்பனை மற்றும் சமூக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும்



செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் எச்சரித்துள்ளார். கடத்தல் வலையமைப்பின் பின்னணி குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2027 தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.வி.பாக்கியலட்சுமி, தேர்தல் வட்டாட்சியர் செல்வி.வசந்தி மற்றும் பலர் உள்ளனர்.

மகரிஷி பள்ளியில் 34 ஆம் ஆண்டு வித்யாரம்பம் நிகழ்ச்சி



திருவண்ணாமலை மகரிஷி வித்யா மந்திர் சி.பி.எஸ்.இ பள்ளியில் வித்யாரம்பம் நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பள்ளியின் முதல்வர் R. அனிதாராம் குரு பரம்பரை பூஜை செய்து விழாவினை தொடங்கி வைத்து தலைமையுரை வழங்கினார். அவ்வுரையில் வித்யாரம்பம் என்பது கல்விக்கான முதல் படி என்றும் இந்நன்னாளில் கல்விப் பயணத்தை தொடங்குவது சிறப்பிற்குரியது என்று கூறினார், மேலும் கல்வியின் முக்கியத்துவத்தை பற்றியும், உண்மை, நேர்மை, நன்னடத்தை, வாழ்வியல் கல்வி மற்றும் ஆழ்நிலை தியானம் ஆகியவற்றை இளம் பருவத்திலிருந்து மாணவர்களுக்கு கற்றுத் தரும் தன்னிகரில்லாகத ஒரே பள்ளி மகரிஷி வித்யா மந்திர் என்று எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டு தங்கள் பிள்ளைகளை பள்ளியில் சேர்த்தனர். கல்விப் பயணத்தில் முதல் அடியெடுத்து வைக்கும் மழலைச்செல்வங்கள் நெல்மணிகள் பரப்பிய தட்டுகளில் "அ" என்று அகரம் எழுதிய மழலைக் கரங்கள், அறிவின் உலகில் அடியெடுத்து வைத்தனர். இவ்விழாவில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் என அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

நாக்பூர் தீஷா பூமி தம்ம சக்கர பரிவர்தன விழாவில் பங்கேற்ற பௌத்தர்களுக்கு ரூ.5,000 வரை மானியம்

நவம்பர் 15-க்குள் விண்ணப்பிக்கலாம்; ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

நாக்பூர் தீஷா பூமியில் விஜயதசமி நாளில் நடைபெற்ற தம்ம சக்கர பரிவர்தன விழாவில் 2026ம் ஆண்டு பங்கேற்றுத் தமிழ்நாடு திரும்பிய பௌத்தர்களுக்கு, நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.5,000வரைமானியம் வழங்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற விரும்பும் தகுதியுடைய பௌத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கானவிண்ணப்பப் படிவத்தைத் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்தும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் பயணத்திற்கான உரிய செலவின ஆவணங்களையும் இணைத்து, 15.11.2026க்குள் ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரியக் கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை – 600 005 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே, இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற விரும்பும் தகுதியுடைய பௌத்தர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விண்ணப்பித்து பயன்பெறலாம் எனத் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு

இராணிப்பேட்டை மாவட்டத்தில் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் தொகை (Houselisting Operations–HLO) பணிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

அதனை தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு (Population Enumeration–PE) பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட மற்றும் பொறுப்பு நிலை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு (21.10.2026 முதல் 22.10.2026) முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.10.2026) நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்



(பொது) திருமதி.வி. பாக்கியலட்சுமி, முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ம.மோகனா, மாவட்ட சென்சஸ் ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி.R.ஜெயலட்சுமி மற்றும் திருமதி.அம்பிலி J நாயர், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சாணார்பட்டி அருகே வாலிபர் வெட்டி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 13 பேர் கைதான நிலையில் மேலும் 2 பேர் கைது

திண்டுக்கல் மேட்டுப்பட்டியை சேர்ந்த வீரபத்ரன்(43) என்பவர் கடந்த 6–ம் தேதி நத்தம்ரோடு, நொச்சிஓடைப்பட்டி அருகே மர்ம கும்பலால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். இதுகுறித்து மாவட்ட எஸ்.பி. ஜெயக்குமார் உத்தரவின் பேரில் சாணார்பட்டி போலீசார் சிறுவன் உட்பட 13 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மேலும் இவ்வழக்கில்



தொடர்புடைய பில்லமாநாயக்கன்பட்டி சிவக்குமார், பிரகாஷ் ஆகிய 2 பேரை சாணார்பட்டி போலீசார் கைதுசெய்துவிசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் இயங்கி வரும் அரசினர் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் மாணவர்கள் விடுதியில் சுமார் 80 மேற்பட்ட மாணவிகள் பயின்று வருகின்றனர் தற்சமயம் விடுதி இடிந்து விழும் தருவாயில் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கட்டிடத்தை இடித்து புதிதாக கட்டித் தருவதாக கூறி தக்காளிமாக மாணவிகளை அருகில் உள்ள மண்டபத்தில் தங்க வைத்துள்ளனர் இன்று வரை கட்டிடம் விதிக்கப்படவில்லை வேலைகள் ஏதும் செய்யப்படவில்லை மாணவிகள் ஒரே மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சில மாணவிகளுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இன்று வரை கண்டுகொள்ளாத அரசு ஊழியர்கள் இந்த தகவல்களை யாரிடம். தெரிவித்தால் மாணவியர் தங்கும்படிதி புதிதாக கட்டித் தருவார்கள்????

உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாமில்

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் க.ப்ரியா ரவிச்சந்திரன் கள ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப, அவர்கள் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாமில் அரக்கோணம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்டார்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப. அவர்கள் இன்று (21.10.2026) உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாமில் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம். தண்டலம் ஊராட்சியில் VB



GRAM G திட்டத்தின் கீழ் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் 50 ஆயிரம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படும் நாற்றங்கால் பண்ணையின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இங்கு மகாகனி, புங்கன், வேம்பு, புளியன், பூவரசு, வேங்கை, நீர்மருது. நெல்லி, இலுப்பை, பாதாம் உள்ளிட்ட மரக்கன்றுகள் 6 அடி உயரம் வரை வளர்க்கப்பட்டு ஊராட்சிகளில் காலியாக உள்ள அரசு புறம்போக்கு இடங்கள். சாலையோரம், குளம் மற்றும் ஏரிகரையோரம் உள்ளிட்ட இடங்களில் நட்டு பராமரிக்கப்படும். தற்பொழுது வரை 28 ஆயிரம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு ள்ளது என துறைச்சார்ந்த அலுவலர்கள் தெரிவித்தனர். தொடர்ந்து, தண்டலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகத்தில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர். கும்பினிப்பேட் நியாய விலைக்கடையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தரம், இருப்பு, விநியோக விவரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, அரக்கோணம் நகராட்சி, விண்டர்பேட்டை குதியிலுள்ள SMART எனும் அறிவுசார் குறைபாடுடையோருக்கான குடியிருப்பு சிறப்புப் பள்ளியில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாற்றுத்திறனாளிகளுடன் கலந்துரையாடினார். இங்கு வழங்கப்படும் பயிற்சிகள். சிகிச்சைகள், ஆசிரியர்களின் கற்பித்தல் முறை குறித்து கேட்டறி ந்தார். தினந்தோறும் வந்து செல்கின்ற மற்றும் இங்கேயே தங்கி பயில்கின்ற என மொத்தமாக இப்பள்ளியில் 42 மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இப்பள்ளி தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்று தனியார் தொண்டு நிறுவனத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இங்குள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு தனிப்பட்ட கல்வித் திட்டம் (EP), பிசியோ தெரபி ஆக்குபெஷ்னல் தெரபி, ஸ்பீச் தெரபி உள்ளிட்ட சிகிச்சைகளும். தொழில்முறைப் பயிற்சி, தினசரி வாழ்க்கைச் செயல்பாடுகளுக்கான பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

தொடர்ந்து, அரக்கோணம் வட்டம், அம்மனூர் பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அரக்கோணம் வட்ட செயல்முறை கிடங்கில் பொதுவிநியோக திட்டத்திற்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தரம், இருப்பு குறித்து பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு தரமான உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் செயல்பட வேண்டுமென கேட்டுக் கொண்டார்கள்.

தொடர்ந்து, அரக்கோணம் நகராட்சியில் உள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் பார்வையிட்டு அங்கு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிக் கொண்டிருந்த இளைஞர்களுடன் கலந்துரையாடினார். அரசு ஏற்படுத்தி கொடுத்துள்ள இதுபோன்ற நல்வாய்ப்புகளை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் உயரிய நிலைக்கு செல்ல வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து, அரக்கோணம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு சுகாதார நிதியின் கீழ் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் இப்பணியானது முடியும் தருவாயிலுள்ளது. எஞ்சியுள்ள பணிகளை விரைவாக முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, அரக்கோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆய்வுகள் கண்டறியப்பட்ட பிரச்சினைகளை குறித்து ஒவ்வொரு துறை அலுவலர்களிடமும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டறிந்து, பொதுமக்கள் தெரிவிக்கும் குறைகளை டனுக்குடன் சரி செய்யக்கூடிய வைகளை ஆய்வு செய்து சரி செய்ய சம்பந்தப்பட்ட துறைச்சார்ந்த அலுவலர்களை கேட்டுக் கொண்டார்கள். தொடர்ந்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

இந்த ஆய்வுகளில் திட்ட இயக்குனர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.ச.செல்வராணி, சமூக பாதுகாப்பு திட்டம் தனி துணை ஆட்சியர் திருமதி. கீதாலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர் திரு. ரமேஷ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் திரு.ஏகாம்பரம். வட்டார வளர்ச்சி அலுவலர் திரு–ரஹமத் பாஷா, உதவி செயற்பொறியாளர் திரு. ஜெரால்டு, நகராட்சி ஆணையாளர் திரு.வீர வாஞ்சிநாதன், வட்டாட்சியர் திருமதி. வரலட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் மலைக்கோவிலில் தங்கரதத்தில் பொருத்தப்பட்டிருந்த வெள்ளி தகடுகள் பழுதடைந்ததை முற்றிலும் நீக்கிவிட்டு புதிய நகாஸ் வேலைப்பாடு செய்யப்பட்ட வெள்ளி தகடுகள் பொருத்தும் பணி மற்றும் தங்க ரதத்தின் வலது பக்க குதிரையின் வலது காலில் பழுதடைந்த பகுதியை புதிய வெள்ளி தகடுகள் கொண்டு இணைத்து சரி செய்யும் பணி ஆகிய இரண்டு வெள்ளி திருப்பணிகளும் இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் அனுமதி பெற்று உபதார் மூலம் ரூபாய் 56 லட்சம் மதிப்பிலான 22 கிலோ வெள்ளியினை கொண்டு மராமத்து பணி மேற்கொள்ளப்பட்டும் புதிய மின் சாதனங்கள் பொருத்தப்பட்டும் இன்று 21.10.2026 புதிய பொலிவுடன் மலைக்கோவிலில் தங்கரதம் உலா நடைபெற்றது என்று என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

–இப்படிக்கு திருக்கோவில் நிர்வாகம்

இராணிப்பேட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் வாரந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் 21.10.2026 தேதி வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.



பே.சிபின், இ.கா.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார். மேலும் அனைத்து காவல் நிலையங்களிலும் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் எச்சரிக்கை



திண்டுக்கல் மாவட்டத்தில் கஞ்சா மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்கள் மற்றும் போதை பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கள் மற்றும் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அவர்கள் எ எச்சரிக்கை விடுத்துள்ளார்

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் இரண்டு மோட்டார்கள் பயன்படுத்தினால் நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு மின்சார துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு உரிய அறிவிப்பு செய்ய வேண்டும் அல்லது துண்டறிக்கை வழங்கப்பட வேண்டும் இவையெல்லாம் தவிர்த்து விட்டு நேரடியாக விவசாயிகளின் அபராத தொகையை விதிப்பது அல்லது விவசாயிகளை குற்றவாளி போல் நசுக்குவது போல் உள்ளது என்று சமூக ஆர்வலர் இளமாறன் தமிழக வெற்றிக்காக ஆட்சியை அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளே வைத்துள்ளார்

‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்’ திட்டத்தின் கீழ் ஆரணியில் ரூ.22.83 கோடி வளர்ச்சிப் பணிகள் ஆய்வு

72 பயனாளிகளுக்கு ரூ.27.54 லட்சம் நலத்திட்ட உதவிகள்; ஆட்சியர் வந்தனா கார்க் வழங்கினார்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டத்தில் ‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்’ திட்டத்தின் கீழ் ரூ.22 கோடியே 83 லட்சம் மதிப்பிலான வளர்ச்சிப் பணிகள் மற்றும் அரசு சேவைகளின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் புதன்கிழமை (21.10.2026) நேரில் ஆய்வு செய்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் 72 பயனாளிகளுக்கு ரூ.27 லட்சத்து 54 ஆயிரத்து 170 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகள் பொதுமக்களைத் தடையின்றிச் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கில், தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டங்களில் மாவட்ட ஆட்சியர் மற்றும் பல்வேறு துறை



அலுவலர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக ஆரணி வட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அங்கன்வாடி, மருத்துவமனையில் ஆய்வு

மேற்கு ஆரணி வட்டம் காமக்கூர் ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் வருகைப் பதிவேடு, எடை, உயரம் மற்றும் உணவின் தரம் குறித்து ஆட்சியர் ஆய்வு செய்தார். தொடர்ந்து அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்துகளின் இருப்பு, மருத்துவச் சேவைகள் மற்றும் மகப்பேறு சிகிச்சை வசதிகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

காமக்கூரில் ரூ.6.30 லட்சம் மதிப்பில் அமைக்கப்ப ட்டுள்ள நாற்றாங்கால் பண்ணையில் 5,000 பழமரக்கன்றுகள் மற்றும் பூச்செடிகள் வளர்க்க ப்பட்டு வருவதையும் பார்வையிட்டார்.

முள்ளிப்பட்டு ஊராட்சியில் ரூ.17.10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடிக் கட்டிடம், நியாயவிலைக் கடை ஆகியவற்றை ஆய்வு செய்தார். மேலும், ரூ.13.30 லட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் கிராமப் பாசனக் கால்வாய் விரிவாக்கப் பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அங்கு ரூ.30 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியையும் ஆய்வு செய்தார்.

விடுதி, பள்ளியில் ஆய்வு

ஆரணியில் உள்ள சமூக நீதி மாணவியர் விடுதியில் சமையல் கூடம், உணவுப் பொருட்களின் இருப்பு, உணவின் தரம் மற்றும் அடிப்படை வசதிகளை ஆய்வு செய்த ஆட்சியர், மாணவியர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

ஆரணி நகராட்சியில் வீடுதோறும் மேற்கொள்ளப்படும் டெங்கு கொசு உற்பத்தித் தடுப்புப் பணிகளைப் பார்வையிட்டார். கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.42.50 லட்சம் மதிப்பில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் பொருள் மீட்பு மையப் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

சிறுமூர் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.74.22 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள மூன்று வகுப்பறைகளை ஆய்வு செய்தார். மாணவர்களிடம் கற்பித்தல் முறை, உணவின் தரம் மற்றும் வகுப்பறை பராமரிப்பு குறித்து கேட்டறிந்தார்.

விவசாயம், சாலை விரிவாக்கப் பணிகள்

அரியபாடி ஊராட்சியில் விதைப் பண்ணைத் திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டிருந்த நிலக்கடலைப் பயிர்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த ஆட்சியர், விவசாயிக்கு வி.ஆர்.ஐ.–10 ரக நிலக்கடலை விதைகளை வழங்கினார்.

புதுப்பாளையம் ஊராட்சி யில் நெடுஞ்சா லைத் துறை சார்பில் ரூ.21 கோடி மதிப்பில் கண்ணமங்கலம்–ஆரணி இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக விரிவாக்கும் பணிகளை ஆய்வு செய்தார். சாலை விரிவாக்கம், கால்வாய் சீரமைப்பு மற்றும் சாலைத் தடுப்புகள் அமைக்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந்தார்.

72 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

ஆரணியில் உள்ள எஸ்.கே.வி. பாக்கியலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 8 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா ஆணைகளும், 30 பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித்தொகை, திருமண உதவித்தொகை மற்றும் கல்வி உதவித்தொகைகளும் வழங்கப்பட்டன.

மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 27 பயனாளிகளுக்குப் புதிய குடும்ப அட்டைகள், வேளாண்மைத் துறை சார்பில் 4 விவசாயிகளுக்கு தலா 8 கிலோ உளுந்து விதைகள் வழங்கப்பட்டன. தோட்டக்கலைத் துறை சார்பில் 2 பயனாளிகளுக்குக் கல் பந்தல் அமைப்பதற்கான பணி ஆணைகள் மற்றும் ஊட்டச்சத்து உயிர் உரங்களும், மாற்றுத்தி றனாளிகள் நலத்துறை சார்பில் ஒருவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டன.

இதன் மூலம் மொத்தம் 72 பயனாளிகளுக்கு ரூ.27,54,170 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் சிவா மற்றும் பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி ஆர் எஃப் ரோடு முழுவதுமே பாதாளை சாக்கடைக்காக போடப்பட்ட கலவைகள் பெயர்ந்து காணப்படுகிறது இரும்பு தடுப்புகள் பாதுகாப்புக்காகவும் வைக்கவில்லை இதனால் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கும் அபாயம் உள்ளது உடனடியாக இதுபோன்ற குழிகளே சரி செய்ய வாகன ஓட்டிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்

புழல் ஒன்றியம் தண்டல்கழனியில் நடைபெற்ற காய்ச்சல் முகாமை கூடுதல் இயக்குநர் ஆய்வு செய்தார்



புழல் ஒன்றியம் தண்டல்கழனியில் நடைபெற்ற காய்ச்சல் முகாமை கூடுதல் இயக்குநர் ஆய்வுசெய்தார்

திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம் கிராண்ட்லைன் ஊராட்சிக்குட்பட்ட தண்டல்கழனி பகுதியில் பொதுமக்களுக்கு காய்ச்சல் தடுப்பு சிறப்பு முகாம் நடைபெற்றது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் கூடுதல் இயக்குநர் டாக்டர் சம்பத் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் பிரியாராஜ், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் மதுமதி ஆகியோர் உடனிருந்தனர். மேலும், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் லக்ஷ்மன்சிங், சுகாதார ஆய்வாளர் சுகுமார் ஆகியாரும் கலந்துகொண்டனர்.

முகாமில் காய்ச்சல் பாதிப்புடன் வந்த பொதுமக்களின் பரிசோதனை, சிகிச்சை மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு குறித்து கூடுதல் இயக்குநர் கேட்டறிந்தார். பின்னர் அலுவலர்களுக்குப் பின் வரும் அறிவுறுத்தல்களை வழங்கினார். மேலும் நீர்நிலைகள் மற்றும் குடிநீர் ஆதாரங்களில் முறையாக குளோரினேற்றம் செய்து, குடிநீர் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்., காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தாமதமின்றி உடனடியாகச் சிகிச்சை அளிக்க வேண்டும். உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய மருந்துகளும் போதிய அளவில் இருப்பு உள்ளதை உறுதிசெய்ய வேண்டும்.

பொதுமக்கள் காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காமல் அருகிலுள்ள சுகாதார நிலையத்தை அணுகுமாறும், காய்ச்சிய குடிநீரைப் பருகுமாறும், வீடுகளைச் சுற்றி நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி ஸ்ரீ தண்ட தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான திரு ஆவினன்குடி ஸ்ரீ குழந்தை வேலாயுத சுவாமி கோயிலில் விஜயதசமி விழாவை முன்னிட்டு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி கற்கும் விதமாக முதல் எழுத்தான அரிசியில்.அ.ஆ.இ.ஈ. என்ற எழுத்தை எழுதி தங்கள் குழந்தைகளுக்கு முதல் எழுத்தினை படிப்பினை கற்பித்தனர்



கலைமகள் சபாவின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக ஒரு நபர் கண்காணிப்பு ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.எஸ்.சுந்தர் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், அரப்பாக்கம் கிராமத்தில் கலைமகள் சபாவிற்குச் சொந்தமான நிலங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ந.சரவணன், இராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜி, வாலாஜா வட்டாட்சியர் திரு.பன்னீர் செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.

செங்குன்றம் ஸ்ரீதேவி பராசக்தி வீரம்மாகாளி அம்மன் ஆலயம் சார்பில் சூரசம்ஹாரம் நிகழ்ச்சி



மாதவரம் தொகுதி செங்குன்றம் அருள்மிகு ஸ்ரீதேவி பராசக்தி வீரம்மாகாளி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி திருவிழா ஆலய ஸ்தாபகர் ராஜா சுவாமி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் புனிதநீர் கலசம் நிறுத்துதல், கொலுமண்டபம் அமைத்தல், கொடியேற்றுதல், காப்புகட்டுதல் மற்றும் நவராத்திரி திருவிழாவையொட்டி 9 நாள்களும் பல்வேறு அலங்காரங்களில் அம்மன் அலங்காரம் செய்து தீபாராதனை காண்பித்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

பின்னர் விஜயதசமி நாளன்று அம்மன் சிம்ம வாகனத்தில் அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் சூரசம்ஹாரம் செய்து அம்பாளுக்கு தீர்த்தவாரி மற்றும் அம்மனுக்கு ஊஞ்சல் சேவை நடைபெற்றது.

சுமங்கலி பூஜையில் சுமார் 500க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு புடவையும், கன்னிகா பூஜையில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு புத்தாடையும், தம்பதிகள் பூஜையில் கலந்து கொண்ட தம்பதினர்களுக்கு வேட்டி, சேலை போன்றவற்றை வழங்கி பாதபூஜைகள் நடைபெற்றது.

இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் தொடர் 10 நாட்கள் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுவட்டார பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர். இதில் ஆலய நிர்வாகிகள், பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



பழனி மலைக்கோவிலில் நவராத்திரி 9-ம் நாள் விழா; கோதைமங்கலத்தில் வன்னிகாசுரன் வதம் நிகழ்ச்சி

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நவராத்திரி திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் கடந்த அக்டோபர் 11–ம் தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்கிய நவராத்திரி விழாவின் 9–ம் நாளான இன்று, வில் அம்பு போடும் நிகழ்ச்சி மற்றும் வன்னிகாசுரன் வதம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனையொட்டி நேற்று புதன்கிழமை பழனி மலைக்கோயிலில் நடை அடைக்கப்பட்டு, பராசக்திவேல் புறப்பாடு செய்யப்பட்டு பழனி அருள்மிகு பெரியநாயகியம்மன் கோயிலை வந்தடைந்தது.

அங்கு பராசக்திவேலுக்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்ட பின், அருள்மிகு முத்துக்குமாரசாமி தங்கக்குதிரை வாகனத்தில் பராசக்திவேல் மற்றும் அருள்மிகு லட்சுமி நாராயணப் பெருமாளுடன் கோதைமங்கலம் அருள்மிகு கோதைஈஸ்வரர் கோயிலை வந்தடைந்தார்.

கோதைமங்கலத்தில் கோதைஈஸ்வரருக்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு அம்பு–வில் போடும் நிகழ்ச்சி தொடங்கியது.

கோயில் முன்பு வன்னி மரம் மற்றும் வாழை மர உருவில் மறைந்திருந்த வன்னிகாசுரனை, பழனி போகர் ஆதீனம் சிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள் சக்திவேல் மற்றும் அம்பு–வில் கொண்டு வதம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், பழனி துணை கண்காணிப்பாளர் தேவராஜ். கோவில் நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 1000–க்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

வன்னிகாசுரன் வதம் முடிந்த பின் சக்தி வேல் மீண்டும் மலைக்கு கொண்டு செல்லப்பட்டு நள்ளிரவில் மலைக்கோயிலில் சம்ரோட்சண பூஜைகள் மற்றும் அர்த்தஜாம பூஜை நடைபெற்றது. இன்று முதல் வழக்கம்போல தங்கரத புறப்பாடு நடைபெறும் என கோவில் நிர்வாகம்தெரிவித்துள்ளது.

தீர்த்தக்கிரியம்பட்டு சன் சிட்டி, குமரன் நகர் மக்கள் வெள்ளத்தில் தத்தளிக்கும் அவலம் தொடருமா?

மாவட்ட ஆட்சியர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினரிடம் சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் கோரிக்கை

திருவள்ளூர் மாவட்டம் புழல் ஊராட்சி ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் சன் சிட்டி, குமரன் நகர் உள்ளிட்ட சில பகுதிகள் அமைந்துள்ளன. இந்தப் பகுதிகளில் 150க்கும் மேற்பட்ட வீடுகள் அமைந்துள்ளன.

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இயற்கை சீற்றங்களான புயல், கனமழையால் பெரிதும் இப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இங்கு வசிக்கும் 150க்கும் மேறபட்ட குடும்பத்தினர் மட்டுமல்லாமல் அவர்களால் வளர்க்கப்படுகின்ற நாய் உள்ளிட்ட வளர்ப்பு பிராணிகளையும் தீயணைப்புத் துறையினர் படகுகளில் சென்று அழைத்து வந்து நிவாரண மையங்களில் தங்க வைக்கப்படுவது வாடிக்கையாகி வருகின்றது.

கலெக்டர்கள் மாறுவார்கள்; காட்சிகள் மாறுவதில்லை என்று பத்திரிகை நண்பர் ஒருவர் அடிக்கடி கூறுவார்.

ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சியர், அமைச்சர், எம்எல்ஏ, அரசு அதிகாரிகள் பார்வையிடுவார்கள். பின்பு குடியிருப்பு பகுதிகளுக்குள் படகுகளில் சென்று மீட்புப் பணி செய்வது தொடரும் அவலமாகும்.



கடந்த 10 நாள்களுக்கு முன்பு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ச. கவிதா இந்தப் பகுதிக்கு நேரிடையாக வருகை தந்து ஆய்வு செய்ததோடு, இந்தப் பகுதியில் நடைபெற்று வரும் கால்வாய் தூர் வாரும் பணிகள் குறித்து கேட்டறிந்தோடு, பணியை துரிதப்படுத்த அதிகாரிகளை அறிவுறுத்தி இருந்தார்.

அக்டோபர் 15ந்தேதி முதல் வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதை தொடர்ந்து கடந்த இரண்டு நாள்களாக பெய்து வரும் மழையால் சன் சிட்டி, குமரன் நகர் பகுதிகள் எப்படி உள்ளன என்பதை அறிய நேரிடையாகச் சென்றோம்.

சன் சிட்டி, குமரன் நகரில் தண்ணீர் தேங்கவில்லை யென்றாலும், தூர் வாரப்பட்ட கால்வாய்களில் மழைநீர் சீராக செல்லாமல் மெதுவாக செல்வதை அறிய முடிந்தது. சுமார் 700 மீட்டருக்கும் மேல் தூர் வாரப்பட்ட கால்வாயின் மணற்களை கால்வாயின் ஓரத்தில் போடப்பட்டிருப்பதும், கால்வாயின் உள்புறம் திட்டுதிட்டாக மணல் மேடுகள் இருப்பதையும் கண்கூடாக காண முடிந்தது.

கால்வாயின் ஓரங்களில் கொட்டப்பட்டுள்ள மணல், குப்பைகள் வடகிழக்கு பருவமழையினால் பெய்யும் மழையினால் கரைந்து திரும்பவும் கால்வாய் உள்ளே சென்று சீராக செல்லக் கூடிய மழைநீரை தடுப்பதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. எனவே வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொண்டு கால்வாயின் உள்ளே உள்ள மணல் திட்டுகளையும், ஓரங்களில் கொட்டப்பட்டுள்ள மணற்குவியல்களையும் உடனடியாக அகற்ற வேண்டுமென்றும், பாடியநல்லூர் ஏரியில் தொடங்கும் மழைநீர் கால்வாயையும், விளாங்காடுபாக்கம் ஊராட்சி வழியாக செல்லும் கால்வாயையும் உடனடியாக தூர் வாரினால் மட்டுமே அடுத்தடுத்த மாதங்களில் பெய்யப் போகும் கனமழையால் இந்தப் பகுதிகளில் மழைநீர் தேங்காமலும் இப்பகுதி மக்கள் வெள்ளத்தில் தத்தளிக்காமலும் காப்பாற்ற முடியும் என்று சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்ட ஆட்சியரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தீர்த்தக்கிரியம்பட்டு சன் சிட்டி, குமரன் நகர் மழை நீர் கால்வாய் தூர் வாரும் பணியை துரிதப்படுத்துவதோடு, விரைந்து பணிகளை முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காவலர் வீர வணக்க தினம் : ஆவடி காவல் ஆணையாளர் மலர் வளையம் வைத்து மரியாதை



காவல்துறை மற்றும் பாதுகாப்புப் படைகளில் பணியாற்றும்போது, நாட்டின் பாதுகாப்பிற்காகவும், பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாக்கவும், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிக்கவும் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த காவலர்களின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 21–ம் தேதி காவலர் வீர வணக்க தினம்கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதனை முன்னிட்டு ஆவடி காவல் ஆணையரக ஆயுதப்படை வளாகத்தில் காவலர் வீர வணக்க தின நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், பணியின் போது தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல், பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையாற்றி உயிர்நீத்த 6 தமிழ்நாடு காவல் துறையினர் உட்பட 154 வீரர்களின் தியாகத்தையும் வீரத்தையும்நினைவுகூர்ந்து வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார், காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் ஆகியோர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

மேலும், கடந்த 2017–ஆம் ஆண்டு மதுரவாயல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணியாற்றி, ராஜஸ்தான் மாநிலத்திற்குச் சென்று கொள்ளை வழக்கின் குற்றவாளிகளை கைது செய்யும் நடவடிக்கையின் போது உயிர்த் தியாகம் செய்த காவல் ஆய்வாளர் பெரியபாண்டியன் துணைவியார் பானு ரேகா, தியாகம் செய்த கணவரின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, ஆவடி காவல் ஆணையாளர், பானு ரேகாவுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார்.

சேலம் கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோவில் நவராத்திரி பெருவிழா



சேலம் நகரின் ஆன்மீக சொத்தாகவும், இப்பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமாகவும் விளங்கும் கோட்டை அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோவிலில், ஒன்பது நாட்கள் கோலாகலமாக நடைபெற்ற நவராத்திரி உற்சவ விழா பக்தி பரவசத்துடன் நிறைவு பெற்றது.

இவ்விழாவின் முக்கிய நிகழ்வான நிறைவு நாள் உற்சவம் (20.10.2026) அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதனையொட்டி அன்னையின் திருச்சன்னதி வண்ண மலர்களால் கண்கவர் வகையில் அலங்கரிக்கப்பட்டு, சிறப்பு வழிபாடுகளும் மகா தீபாராதனைகளும் வெகு விமரிசையாக நடைபெற்றன. இவ்விழாவில் யூனிஃபை அகாடமியின் நிறுவனர், மேலாண்மை இயக்குநர் மற்றும் என்.எஸ்.கே. கல்விமைய ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு பாரத் ஜோதி கல்வி சேவை செம்மல், அரிமா அரசர் முனைவர் த. விக்னேஷ் அவர்களும், உயிர் மெய் தமிழ் சங்கத்தின் கவிஞரும் சொல்லரசருமான சேலத்து பாரதி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். இவர்களுடன் பல்வேறு சமூக ஆர்வலர்களும், ஆன்மீகப் பெருமக்களும், திரளான பொதுமக்களும் வருகை தந்து அம்மனின் திருவருளை மனதார பெற்றுச் சென்றனர்.

விழாவில் கலந்துகொண்ட அனைத்து பக்தர்களுக்கும் தூய்மையான முறையில் சுவையான அன்பு உணவு வழங்கப்பட்டது. சேலம் மாநகரின் காவல் தெய்வமாக கருதப்படும் கோட்டை பெரிய மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற இந்த நவராத்திரி பெருவிழா, ஆன்மீக சிறப்போடும் சமூக நல்லிணக்கத்தோடும் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

பெண் வேடமிட்டு கத்தியை காட்டி 5 சவரன் தங்கத் தாலிச் செயின் பறித்த குற்றவாளி கைது



கடந்த 18.10.2026 அன்று, ஆவடி, மோரை பகுதியில் வீட்டில் தனியாக இருந்த செந்தூர்கனி (வ/60) என்பவரிடம் சுடிதார் அணிந்து வந்த நபர் கத்தியைக் காட்டி மிரட்டி, அவர் அணிந்திருந்த 5 சவரன் தங்கத் தாலிச் செயினைப் பறித்து சென்றதாக அளித்த புகாரின் பேரில், T7 டேங்க் பேக்டரி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்படியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர். சிவக்குமார் மேற்பார்வையிலும், ஆவடி காவல் துணை ஆணையாளர் வி.வினோத் சாந்தாராம் அறிவுறுத்தலின்படியும், ஆவடி காவல் சரக உதவி ஆணையாளர் சம்பத் தலைமையில் மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு, குற்றவாளியைக் கைது செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தனிப்படை போலீசார் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து, சம்பவம் நடைபெற்ற 24 மணி நேரத்திற்குள் இக்குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட ஆவடி, வீராபுரம் பகுதியைச் சேர்ந்த குற்றவாளி வெங்கடேஷ் ராஜா (வ/35) என்பவரைக் கைது செய்தனர்.

விசாரணையில் அவர் சுடிதார் அணிந்து பெண் வேடத்தில் இந்த கொள்ளைச் சம்பவத்தை அரங்கேற்றியது தெரியவந்தது,

அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட 5 சவரன் தங்கத் தாலிச் செயினைப் பறிமுதல் செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: G.RAJA